ISSN:2582-9599

பிரணவ் தமிழியல் ஆய்விதழ்

# எக்லாஸ்புரம் மயான கொள்ளை வழிபாடு

முனைவர் ஜெ.கோமளா,

உதவிப்பேராசிரியர்,மருதர் கேசரி ஜெயின் மகளிர் கல்லூரி,
வாணியம்பாடி

komspink@gmail.com

**ABSTRACT**

Eklaspuram is a village in Tirupattur district. The village celebrates the Mayana Kollai festival once a year on the new moon day of the month of Masi with great enthusiasm. This festival, which is held in the crematorium, is believed to fulfill the wishes of the people, and this is done based on the information given by Subramani Aiya, a pump maker from that village.

**Keywords:** Eklaspurm, Mayana Kollai, festival, people

**ஆய்வு சுருக்கம்:**

எக்லாஸ்புரம் திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஒரு கிராமமாகும். கிராமத்தில் ஆண்டிற்கு ஒரு முறை மாசி மாத அமாவாசையன்று மயான கொள்ளை திருவிழா வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது. சுடுகாட்டில் நடைபெறும் இம்மயான கொள்ளை திருவிழாவானது மக்கள் வேண்டியது நிறைவேறும் என்றும், அவ்வூரை சேர்ந்த சுப்பிரமணி ஐயா பம்பை அடிக்கும் தொழிலைச் செய்பவர் கூறியுள்ள தகவலைக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

**முன்னுரை :**

புராணங்களின்படி, சிவன் கையிலிருந்து பிரம்மனின் கபாலம் தவறி விழுந்துவிட, அங்காள பரமேஸ்வரி அம்மன் அதை தன் காலால் மிதித்து பூமியில் ஆழ்த்தினாள். இந்த நிகழ்வின் நினைவாக, மயானத்தில் அம்மன் கபாலத்திற்காக சூறையாடும் நிகழ்ச்சி நடத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் உள்ள அங்காளம்மன் கோயில்களில் இந்த விழா வெகு விமர்சையாக கொண்டாடப்படுகிறது. குறிப்பாக, "எக்லாஸ்புரம்" திருப்பத்தூர் மாவட்டத்தில் மிக விமர்சையாக கொண்டாடப்படுகின்றது.

**மயானக் கொள்ளை (Mayana Kollai):**

திருவிழா சிவராத்திரியை அடுத்த மாசி மாத அமாவாசையன்று தமிழகத்திலுள்ள அங்காள பரமேசுவரி ஆலயங்களில் கொண்டாடப்படுகின்றது. இவற்றில் எக்லாஸ்புரத்தில் கொண்டாடப்படும் மயானக் கொள்ளை முதன்மையானதாகும். மீனவர்கள் வணங்கும் தெய்வமாக அங்காள பரமேசுவரி அம்மன் விளங்குவதால் இக்கொண்டாட்டங்கள் முதன்மையாக மீனவ சமுதாயங்களில் பரவலாகக் கொண்டாடப்படுகின்றது என்று அவ்வூரை சேர்ந்த சுப்பிரமணி என்னும் பம்பை அடித்தல் தொழிலைச் செய்யும் முதியவர் கூறினார்.

**பழங்கால வரலாறு:**

துவக்கத்தில் படைப்புக் கடவுள் நான்முகனுக்கு ஐந்து தலைகள் இருந்தன. பார்வதி தேவி, பிரம்மனின் ஐந்து தலையைப் பார்த்து சிவன் என்று நினைத்து வணங்கினார். இதனைக் கண்டு நகைத்ததால் சினம் கொண்ட பார்வதி சிவனிடம் முறையிட, பிரம்மாவின் ஒரு தலையை சிவன் கொய்துவிட்டார். கொய்யப்பட்ட பிரம்மனின் தலை சிவனின் கையில் ஒட்டிக்கொண்டது. அதையே பிச்சைப் பாத்திரமாக ஏந்தி ஈசன் பிச்சையெடுக்கும் நிலை ஏற்பட்டது. போடப்படும் உணவையெல்லாம் கபாலமே விழுங்கிவிட்டதால், உலகுக்கே படியளக்கும் ஈசனுக்கே உணவு கிட்டவில்லை. இந்த நிலையில், பிரம்மாவின் தலை கொய்யப்பட்டதற்குப் பார்வதியே காரணமெனக் கருதிய சரஸ்வதி தேவி, பார்வதியை "கொடிய உருவத்துடன் நீ இடம் இல்லாமல் அலைந்து புற்றையே வீடாகக் கொண்டு வாழ்வாய்!' எனச் சாபமிட்டாள். அதன்படி பார்வதி பூவுலகில் பல இடங்களுக்குச் சென்று முடிவில் மலையரசுனுக்கு உரிமையான ஒரு நந்தவனத்தில் தவம் இருக்கத் தொடங்கினாள். அங்கு காவலுக்கு இருந்த மீனவக் காவலாளி தடுத்தும் புற்றால் தன்னை மூடிக் கொண்டு அங்காள பரமேஸ்வரியாகக் கோவில் கொண்டாள்.

மலையரசன் புற்றைக் கலைக்க முற்பட, அவன் தன் ஆற்றலை இழந்தான். இதனால் வந்திருப்பது அம்மையே என அனைவரும் அறிந்தனர்.இந்தக் கோவிலிற்குச் சிவன் வர, அங்காள பரமேஸ்வரி சிவன் கையிலிருந்த கபாலத்தில் சுவையான உணவை இட்டாள். எல்லாவற்றையும் கபாலம் விழுங்கிவிட, மகாலட்சுமியின் பரிந்துரைப்படி அம்மன் மூன்றாவது கவளத்தைக் கைதவறியது போலக் கீழே போட்டாள். உணவின் சுவையால் கவரப்பட்ட கபாலம், அதை உண்ண சிவனின் கரத்தைவிட்டு நீங்கி கீழே போனது; பிரம்ம கபாலம் மீண்டும் ஈசனின் கைகளை அடைய முடியாதபடி அதைத் தன் காலால் மிதித்து பூமியில் ஆழ்த்திவிட்டாள். இந்த நாளே மயானக் கொள்ளை திருவிழாவாகக் கொண்டாடப்படுகிறது.

மாசி மகாசிவராத்திரி அன்று நண்பகலில் நிகழ்ச்சி தொடங்குகிறது. தற்போது இறந்த பிணங்களின் சாம்பல், மண் ஆகியவற்றால் 3 அல்லது 4 மீட்டர் நீளமுள்ள அம்மன் (பார்வதி) உருவம் படுத்திருப்பது போல் அழகுற செய்யப்படுகிறது. அன்று மாலை பூவால் செய்யப்பட்ட கரகம் சோடிக்கு, இரவு முழுவதும் அம்மன் ஊர்வலம் நடைபெறுகிறது. பின்னர் விடியற்காலையில் மயானக்கிற்குச் சென்று அம்மனுக்குக் கண் திறந்து பம்பைக்காரர்கள் பாடல் பாடுவர். காலையில் பூசாரி பதினாறு கைகள் கொண்ட அம்மனை அலங்கரித்து சிம்ம வாகனத்தில் ஏற்றுவர். காளி வேடமிட்டு கொண்டு நேர்த்திக் கடன் வேண்டியவர்கள் ஆடி வருவார்கள்.

அப்போது அங்கு கூடியிருக்கும் மக்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த முருங்கைக்காய், மஞ்சள், கொழுக்கட்டை ஆகியவற்றை வான்நோக்கி வீசுவார்கள். மக்கள் கூட்டத்தில் பெண்களே அதிகம் காணப்படுகிறார்கள். பின்னர் அம்மனை உருவாக்கியிருக்கும் சாம்பல், மண் போன்றவற்றைச் சண்டை போட்டுக் கொண்டு மக்கள் கொள்ளையடிக்கிறார்கள். பூசாரி அம்மன் தலை மீது விழுந்தவுடன் அம்மன் உருவம் சிதைக்கப்படுகிறது.

அப்போது எடுக்கப்படும் மண் அல்லது சாம்பல் தீய சக்திகளையும், நோய்களையும் விரட்டும் ஆற்றல் வாய்ந்ததாகவும் மக்களால் நம்பப்படுகிறது. அதனை நிலத்தில் புதைத்தால் நல்ல விளைச்சல் உண்டாகும். அதனை பூசாரி திருநீறு போல் மக்களுக்கு வழங்குவர்.

“மயான கொள்ளை” நிகழ்ச்சியின் போது பம்பைகாரர்கள் பாடல் இசைப்பார்கள். விழுப்புரம் அருகிலுள்ள தெளி என்ற ஊரில் பூசாரியின் சகோதரர் அங்காளம்மன் வேடமிடுவார். பெண் வேடமிட்டவர் தலையில் கிரீடம் அணிந்து அவரை வணங்குகிறார். தனக்கு உடல்நலமில்லாத போது சிலர் தான் சாகும் வரை காட்டேரி வேடம் போடுவதாக நேர்ந்து கொண்டு, அதனால் உடல்நலம் பெற்றதாகவும் நம்புகிறார்கள்.

கேரளத்திலும், கேரளத்தையொட்டிய குமரி மாவட்டத்தின் சில பகுதிகளில் நிகழ்த்தப்படும் அம்மன் கோயில்களில் “களமொக்கும் பாட்டும்” என்ற நிகழ்ச்சி மயான கொள்ளையோடு தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. களமொக்கு பாட்டு அம்மன் உருவத்தைத் தரையில் வரைந்து வண்ணம் தீட்டி பாடல் பாடியும் களச்சித்திரம் அழிக்கப்படும்.

**எக்லாஸ்புர சுடுகாட்டில் நடைபெறும் மயான கொள்ளை:**

மகாசிவராத்திரி அன்று நண்பகலில் நிகழ்ச்சி தொடங்குகிறது. தற்போது இறந்த பிணங்களின் சாம்பல், மண் ஆகியவற்றால் 3 அல்லது 4 மீட்டர் நீளமுள்ள அம்மன் (பார்வதி) உருவம் படுத்திருப்பது போல் அழகுற செய்யப்படுகிறது. அன்று மாலை பூவால் செய்யப்பட்ட கரகம் சோடிக்கு, இரவு முழுவதும் அம்மன் ஊர்வலம் நடைபெறுகிறது. பின்னர் விடியற்காலையில் மயானக்கிற்குச் சென்று அம்மனுக்குக் கண் திறந்து பம்பைக்காரர்கள் பாடல் பாடுவர். காலையில் பூசாரி பதினாறு கைகள் கொண்ட அம்மனை அலங்கரித்து சிம்ம வாகனத்தில் ஏற்றுவர்.

காளி வேடமிட்டு கொண்டு நேர்த்திக் கடன் வேண்டியவர்கள் ஆடி வருவார்கள்.

புடவை கட்டி, முகத்தில் சிகப்பு வண்ணம் பூசி, நீண்ட முடியுடன் ஒப்பனை செய்திருப்பர். அவர்களுள் ஒருவர் ஆட்டு ஈரலை வாயில் கவ்வி கையில் தீச்சட்டி ஏந்தி வருவார். சேவல் பலி, பூசை, ஊர்வலம், முடிந்த பிறகு பூசாரி ஒப்பனை செய்துகொண்டு படுத்திருக்கும் அம்மன் தலைமீது ஆவேசமுற்று விழுவார்.

அப்போது அங்கு கூடியிருக்கும் மக்கள் தாங்கள் கொண்டு வந்திருந்த முருங்கைக்காய், மஞ்சள், கொழுக்கட்டை ஆகியவற்றை வான்நோக்கி வீசுவார்கள். மக்கள் கூட்டத்தில் பெண்களே அதிகம் காணப்படுகிறார்கள். பின்னர் அம்மனை உருவாக்கியிருக்கும் சாம்பல், மண் போன்றவற்றைச் சண்டை போட்டுக் கொண்டு மக்கள் கொள்ளையடிக்கிறார்கள். பூசாரி அம்மன் தலை மீது விழுந்தவுடன் அம்மன் உருவம் சிதைக்கப்படுகிறது.

அங்காளம்மன் பிரம்ம கபாலத்தை காலால் மிதித்து கொன்ற தினத்தை நினைவு கூறும் வகையில், பக்தர்கள் அம்மனுக்கு காணிக்கையாக வழங்கும் பொருட்களைக் கொள்ளை அடிப்பது போல் பாவனை செய்வார்கள். இந்த மயான கொள்ளை திருவிழாவில் வேண்டியது கிடைக்கும் என்ற நம்பிக்கையும், எந்த பிரச்சினையாக இருந்தாலும் தீரும் என்ற நம்பிக்கையும் மக்கள் கொண்டுள்ளனர். முக்கியமாக குழந்தை இல்லாதவருக்கு குழந்தை பாக்கியம் உண்டாகும்.மண்ணில் அம்மன் உருவம் செய்து வழிபடுவார்கள். அம்மன் முகத்தில் இரண்டு கண்களிலும் இரண்டு முட்டைகள் வைக்கப்படும். பின்னர் அந்த இரண்டு முட்டைகளும் ஏலம் விடுவார்கள். இவ்விழா தீயச் சக்திகளை விரட்டுவதாக நம்பப்படுகிறது. இவ் ஊரில் மயான கொள்ளையின் போது ஆடு, கோழி போன்ற விலங்குகள் பலியிடப்படுகிறது.

மயான கொள்ளைச் சடங்கின் போது பம்பைக்காரர்கள் பாடல் இசைத்தல் நடைபெறும்.எக்லாஸ்புரத்தில் நடைபெறும் மயான கொள்ளையில் அம்மனுக்கு நேர்ந்து கொண்டவர்கள் காளி வேடமிடுவர். ஊர்வலத்தில் பூசாரிக்கு அடுத்தபடியாக இவர்கள் வருவர். பூசாரியும் சகோதரர்களால் அங்காளம்மன் வேடம் போடப்படுகிறது. பெண் வேடமிட்டு தலையில் உயரமான கிரீடத்தை அணிந்து கொள்ளும் இவர் வணங்கத்தக்கவராக உள்ளார். இதே ஊரைச் சேர்ந்த ஒருவர் தனக்கு உடல் நலமில்லாத போது உயிர் உள்ளவரை காட்டேரி வேடம் போடுவதாக நேர்ந்து கொண்டார். இதனால் உடல்நலம் பெற்றதாக நம்பும் இவர் காட்டேரி வேடமிடுகிறார்.

தலைமுடியை விரித்துப் போட்டிருக்கும் பெண்ணாக இவ்வேடம் அமைகிறது. இவருக்கு அருள் தரும்போது இவரிடம் தங்கள் எதிர்காலம் குறித்து மக்கள் கேட்கின்றனர். அவரும் எதிர்காலம் குறித்து அருள்வாக்குத் தருகிறார். கரகம் எடுக்கும் நால்வருள் இருவர் பெண் வேடமிடுகின்றனர். வாயில் ஆட்டின் குடலை கவ்விக் கொள்கின்றனர். இந்த நிகழ்ச்சியில் பம்பை இசைக் கேற்ப இவர்கள் ஆடுகின்றனர். இதற்கு ஒரு புராணக் கதை அடிப்படையாக உள்ளது.

நாயர் சமூகத்தினரால் நிகழ்த்தப்படும் இந்த நிகழ்ச்சி நம்பூதிரி அல்லது பிராமணரால் பூசை செய்யப்படுகிறது. நம்பூதிரிதான் தரைச்சித்திரத்தை அழிப்பார். கால் பகுதியிலிருந்து சித்திரம் அழிக்கப்படுகிறது. மார்புப் பகுதியில் இருக்கும் அரிசி "திருமலை பிரசாதம்" என நம்பப்படுகிறது.

இக்கதை வருமாறு,வல்லாள ராசன் என்னும் சிவ பக்தன் தீய அரசன். அங்காளம்மன் கிழவி உருவில் அவனிடம் சென்று உணவு கேட்க அவன் தரவில்லை. அவன் மனைவி கர்ப்பிணியாக இருந்தபோது பிரசவத்திற்கு மருத்துவச்சி கிடைக்கவில்லை. அங்காளம்மன் மருத்துவச்சியாக சென்று ராணியின் வயிற்றைக் கிழித்து, குழந்தையை எடுத்து குடலை மாலையாக போட்டுக் கொண்டாள். ராணி இறந்தாள். நாடு அழிந்தது. வல்லாளராசன் அங்காளம்மனை வணங்கினான்.

**முடிவுரை:**

இவ்விழா முடிந்ததும் தரைச் சித்திரத்தை நம்பூதிரி அழிப்பார். சூரிய கதிர்கள் பூமியில் படும் முன் தரைச்சித்திரம் அழிக்கப்படுகின்றது. கால் பகுதியில் இருந்து சித்திரம் அழிக்கப்படுகிறது.

மார்புப் பகுதியில் இருக்கும் அரிசி 'திருமுலை பிரசாதம்' எனப்படும். இந்த அரிசியில் ஒன்று இரண்டினை சேர்த்து கஞ்சி வைத்துப் பிரசவமான பெண்ணுக்கு கொடுத்தால் பால் சுரக்கும் என்று நம்பப்படுகிறது. சிதைக்கப்பட்ட ஓவியத்தில் இருந்து எடுக்கப்படும் வண்ணப்பொடிகள் பிரசாதமாக வழங்கப்படுகின்றன. பேய் பிசாசுகளை விரட்டக் கூடிய ஆற்றல் வாய்ந்ததாக இந்தப்பொடி கருதப்படுகிறது.

**மதிப்பீடு:**

1. இவை அம்மன், காளி வழிபாட்டுச் சடங்குக் கலையோடு தொடர்புடையவை. இரண்டிலுமே உருவங்கள் உருவாக்கப்படுகின்றன.

2. அந்த அம்மனை போற்றிப் பாடல்கள் பாடப்படுகின்றன. பின்னர் பூசகர்களால் அந்த உருவங்கள் அழிக்கப்படுகின்றன.

3. அந்த உருவங்கள் உருவாக்கப்படும் மூலப் பொருட்கள் பிரசாதங்களாகக் கருதப்படுகின்றன.இந்த மூலப் பொருட்கள் வாழ்க்கை வளத்திற்கு உதவக்கூடியவையாக, மந்திர ஆற்றல் வாய்ந்தவையாக நம்பப்படுகின்றன.

4. மயான கொள்ளை நிகழ்த்துதலில் காளி, அங்காளம்மன், காட்டேரி, பேய்ச்சி போன்ற பல வேடங்கள் போடப்படுகின்றன.

5. வேடமிட்டவர்கள் பம்பை இசைக் கேற்ப ஆடுகின்றனர். பம்பைக்காரர்கள் பாடும் பாடல்களும் அதற்கேற்ப ஆடல்களும் சிறப்பிடம் பெறும். ஆயினும் இந்த நிகழ்த்துதல்கள் அனைத்தும் மயான கொள்ளை என்னும் வழிப்பாட்டு நிகழ்த்துதலின் அங்கமாக உள்ளனவாதலால் அவை தனித்தனியே விளக்கப்படவில்லை.

6. மேலும் நாட்டுப்புறக் கலைகளில் இது போன்ற ஆய்வுகளை மேற்கொள்ள மாணவர்கள் முன்வர வேண்டும்.

7. மேலும் நாட்டுப்புற கலைகளில் மக்களிடையே மயான கொள்ளை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**சான்றெண் விளக்கம்:**

1.தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும் - முனைவர் கா. காந்தி

2. நாட்டுப்புற கலைகள் - டாக்டர் ஆறு. இராமநாதன்

3. நாட்டார் வழகாற்றியல் - தே.லூர்து

4.நாட்டுப்புறவியல் - சு. சண்முகசுந்தரம் - காவ்யா பதிப்பகம் -1975

5. தமிழ் நாட்டுப்புறவியல் - டி. தருமராஜ் - கிழக்கு பதிப்பகம்

6. நாட்டுப்புற இயல் ஆய்வுகள் - முனைவர் பெ. சுப்பிரமணியன் - காவ்யா பதிப்பகம் .

7.நாட்டுப்புறவியல்- சு. சக்திவேல் -மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

8. நாட்டுப்புறவியல் - மு. இளங்கோவன் - வயல்வெளிப் பதிப்பகம், அரியலூர்.